(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) தற்சமயம் நெடுஞ்சாலைத் துறையிலும், பொதுப் பணித் துறையிலும் மொத்தம் 95 பேர் தற்காலிக இளநிலைப் பொறியாளர்களாக 1970-ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார்கள். தமிழ்நாடு பொதுப் பணிக் கழகம் இவர்களைத் தேர்ந்தெடுத்த பின்னால் தான் இவர்களின் பணி முறைப்படுத்தப்படும். இதுவரை இவ்விரு துறைகளிலும், 272 இளநிலைப் பொறியாளர்களின் பணி முறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஊராசி, ஊராட்சி ஒன்றிய அலுவலர் மாநாடு

*79 வினா—திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து யூனியன், போர்டு இவைகளில் பணிபுரியும் அலுவலர்கள் மாநாடு 1972 டிசம்பர் மாதத்தில் கூடி அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் அனுப்பி உள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அக் கோரிக்கைகளின் பேரில் அரசாங்கம் தற்சமயம்வரை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ? அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) அம் மாநாட்டிற்றின் 70 தீர்மானங்கள் அடங்கிய முறையீடு 7—3—1973 அன்று அரசுக்கு வரப்பெற்றுள்ளது. அக் கோரிக்கைகளும் அவற்றின்பேரது அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளையும் காட்டும் பட்டியல் * பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : அதிலுள்ள பெரும்பாலான கோரிக்கைகள் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருப்பதாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாக நிறைவேற்ற முடியவில்லை என்றும்

---

* 475–496 பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 சனவரி 22]

கூறப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி வளர்ச்சித் துறையில் பத்தாண்டுகளுக்கும் அதிகமாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிற வர்கள் எந்தவிதமான ப்ரமோஷனும் இல்லாமல் கஷ்டப்படு கிறார்களே, அந்தக் குறிப்பிட்ட கோரிக்கையாவது ஏற்று ஒவ்வொரு இடத்திலும் க்ரேடு 1, 2 ஐ 3:7-க்குப் பதில் 5:5 என்பதாக அமைத்து உடனடியாக ப்ரமோஷன் கிடைக்கச் செய்ய முன்வரு வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போதுதான் நிர்வாகச் சீர்திருத்தக் குழு தன் அறிக்கையை அவைக்கு அனுப்பி யிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கிறபோது பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேறிவிடும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்தப் பரிசீலனை எவ்வளவு காலத் திற்குள், எத்தனை வாரத்திற்குள் முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்போது இயலாது.

திரு. நா. வீராசாமி: அவர்களது தீர்மானங்களில் ஒன்று ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் டிராக்டர் டிரைவர், டிரில்லர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது. அவர்களை நிரந்தரமாகச் செய்வது சாத்தியமன்று என பதிலளிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் டிராக்டர் டிரைவர், ட்ரில்லர் விவசாயிகளுக்கு இன்றியமையாத உதவியாளராக இருப் பதால் அவர்களை நிரந்தரமாக்க மறுபரிசீலனை செய்து நட வடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்களது கோரிக் கைகளில் ஒன்று அவர்களை அரசுப் பணியாளராக ஆக்க வேண்டும் என்பது. அது பரிசீலனையில் இருக்கிறது. அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுமானால் அவர்களது கோரிக்கையனைத் திற்குமே ஓரளவு பரிகாரம் கிடைக்கும்.

திரு. ஆ. பரந்தாமன்: அவர்கள் அனுப்பிய தீர்மானங்களில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு இளநிலை உதவியாளர், தட்டெழுத்தாளர் நியமிக்கப்பட வேண்டும் என்பது, இதையாவது உடனடியாகப் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதைத்தான் நான் சொன்னேன். மொத்தமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். நிர்வாகச் சீர்திருத்தக் குழு இதற்குமேலே சில சிபார்சுகளைச் செய்திருக்கிறது. அதன் பரிசீலனை முடிந்த பிறகு முடிவான அபிப்பிராயம் சொல்லப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1971-ம் ஆண்டே அவர்கள் இதே தீர்மானங்களை நிறைவேற்றி, தங்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று சொன்னார்களே, அது சம்பந்தமாக உடனடியாக முடிவு எடுப்பதுபற்றி ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அது சம்பந்தமாகவும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். மருதாசலம்: பஞ்சாயத்து யூனியன், நகரசபை பணிகளில் 18 சதவிதம் கண்டிப்பாக அரிசனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற நியதியை நிர்ணயிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போதே ஒருசில இடங்களில் அது பின்பற்றப்படுகிறது. எல்லா இடங்களிலும் நிரந்தரமாகப் பின்பற்ற என்ன என்ன செய்யலாம் என்பது யோசிக்கப்படும்.

ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம்

*80 **வினு—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியாற்றின் குறுக்கே, புதுவாயல்-பெரியபாளையம் நெடுஞ்சாலை புதுப்பாளையம் கிராமத்தை இணைக்கும் தரைப் பாலம் அமைக்கப்படும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அரசு தனது 27–11–73 நாளிட்ட ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை ஆணை எண் 2651-ல் ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் தரைப் பாலத்தை அமைக்க அனுமதி வழங்கியிருக்கிறது. இந்த வேலை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.